www.a2zSubjects.com

Signature and Name of Invigilator

1. (Signature) ____________________

   (Name) ____________________

2. (Signature) ____________________

   (Name) ____________________

OMR Sheet No. : ............................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |
(In figures as per admission card)

Roll No. ____________________
(In words)

D 2 6 1 5

# PAPER - III
# TAMIL

Time : 2½ hours] [Maximum Marks : 150

Number of Pages in this Booklet : 24 | Number of Questions in this Booklet : 75

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of seventy five multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered on the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (1), (2), (3) and (4). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** ① ② ● ④ where (3) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark your response at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are however, allowed to carry original question booklet and duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There are no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचहत्तर बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए पुस्तिका पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका का नंबर OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक का नंबर इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (1), (2), (3) तथा (4) दिये गये हैं। आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।
   **उदाहरण :** ① ② ● ④ जबकि (3) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं। यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं।
9. आपको परीक्षा समाप्त होने पर मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें। हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न-पुस्तिका तथा OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक ( कैलकुलेटर ) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं।**



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

# TAMIL
# தமிழ்
## Paper-III
## தாள்-III

**Note :** This paper contains **seventy five (75)** multiple choice questions, each question carrying **two (2)** marks. Attempt all questions.

குறிப்பு : இந்தவினாத்தாள் **எழுபத்தைந்து** (75) விடைதெரிவினாக்களைக் கொண்டது. ஒவ்வொருவினாவுக்கும் உரிய மதிப்பெண்கள் **இரண்டு** (2). அனைத்துவினாக்களுக்கும்விடைதருக.

1. பதிற்றுப்பத்தில் அந்தாதித் தொடையில் அமைந்தது :
   (1) இரண்டாம் பத்து (2) மூன்றாம் பத்து
   (3) நான்காம் பத்து (4) ஐந்தாம் பத்து

2. மருதத் திணையை முதற்கண் கொண்டுள்ள இலக்கியம் :
   (1) ஐங்குறுநூறு (2) அகநானூறு
   (3) கலித்தொகை (4) குறுந்தொகை

3. திராவிட மொழிகளுள் மிகுதியான மக்களால் பேசப்படுவது :
   (1) தமிழ் (2) தெலுங்கு
   (3) கன்னடம் (4) மலையாளம்

4. நிலந்தருதிருவின் பாண்டியன் முடத்திருமாறன் என அழைக்கப்பட்ட செய்தியைக் கூறும் நூல் :
   (1) பஞ்ச மரபு (2) சிறுபஞ்ச மூலம்
   (3) பஞ்ச லட்சணம் (4) பஞ்சதந்திர வெண்பா

5. 'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆயமகள்' எனும் இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் :
   (1) புறநானூறு (2) நற்றிணை
   (3) கலித்தொகை (4) அகநானூறு



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

6. 'பொன்னின் அன்ன பூவினச் சிறியிலை, புன்கால் உன்னத்துப் பகைவன் எம்கோ' எனும் அடிகளில் குறிப்பிடப்படும் மன்னன் :
   (1) செல்வக்கடுங்கோ வாழியாதன்
   (2) கரிகால் பெருவளத்தான்
   (3) பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்
   (4) பாண்டியன் நெடுஞ்செழியன்

7. களவுப் புணர்ச்சியின் வேறுபெயர் :
   (1) கள்ளப் புணர்ச்சி (2) உள்ளப் புணர்ச்சி
   (3) மெய்யுறு புணர்ச்சி (4) இயற்கைப் புணர்ச்சி

8. பருவ வரையறை பகரப்படாதது :
   (1) பொருள்வயின் பிரிதல் (2) கல்விவயின் பிரிதல்
   (3) ஒருவழித் தணத்தல் (4) போர்வயின் பிரிதல்

9. அடுக்கியல் என்பது :
   (1) அம்போதரங்கம் (2) அராகம்
   (3) சுரிதகம் (4) தரவு

10. இருசீரடி நான்காய் மூன்று செய்யுள் ஒருபொருள்மேல் அடுக்கிவருவன :
   (1) கலித்தாழிசை (2) வெண்டாழிசை
   (3) அகவல் தாழிசை (4) வஞ்சித் தாழிசை

11. இல்வரை இகவாதது :
   (1) பகல்குறி (2) அல்லகுறி
   (3) இரவுக்குறி (4) அறிகுறி

12. அரசன் பொருந்தி மஞ்சனம் பண்ணும் மங்கலத்தின் மிகுதியைக் கூறுவது :
   (1) வாண் மங்கலம் (2) மண்ணு மங்கலம்
   (3) குடை மங்கலம் (4) மங்கல வாழ்த்து



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

13. நீலகேசியை நீலம் என்று சுருக்கமாகக் குறிப்பிடுவது :
(1) யாப்பருங்கல விருத்தி
(2) இறையனார் களவியல் உரை
(3) யாப்பருங்கலக் காரிகை
(4) யாப்பதிகாரம்

14. 'ஒட்டக் கூத்தர் கவி அழகு வேண்டி வளையாபதியை நினைத்தார்' என்ற குறிப்பு இடம்பெற்றுள்ளது :
(1) கலிங்கத்துப் பரணி உரை
(2) தக்கயாகப் பரணி உரை
(3) கொட்டத்துப் பரணி உரை
(4) வங்கத்துப் பரணி உரை

15. சமய திவாகரம் என்னும் பெயர்பெற்ற உரைநூல் :
(1) குண்டல கேசி (2) சிலப்பதிகாரம்
(3) நீலகேசி (4) சீவக சிந்தாமணி

16. திருவாய்மொழிக்கு உரை வரைந்தவர்கள் :
(i) நாதமுனிகள்
(ii) ஆளவந்தார்
(iii) நம்பிள்ளை
(iv) வடக்குத் திருவீதிப்பிள்ளை
இவற்றுள்,
(1) (ii), (iii), (iv) சரி (2) (i), (iii), (iv) சரி
(3) (i), (ii), (iv) சரியல்ல (4) (i), (ii), (iii) சரி

17. பண்புத் தொகையின் இலக்கணங்கள் :
(i) வண்ணம்
(ii) வடிவம்
(iii) காலம்
(iv) அளவு
இவற்றுள்,
(1) (i), (iii), (iv) சரி (2) (i), (ii), (iv) சரி
(3) (i), (ii), (iii) சரி (4) (ii), (iii), (iv) சரி



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

18. 'முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர் திறப்பாடு இலாதவர்'- இதில் இடம்பெறும் ஏகாரம் :
    (i) எதிர்மறை
    (ii) தேற்றம்
    (iii) பிரிநிலை
    (iv) வினா
    இவற்றுள்,
    (1) (i), (ii), (iii) சரியல்ல
    (2) (ii), (iii), (iv) சரியல்ல
    (3) (i), (iii), (iv) சரியல்ல
    (4) (i), (ii), (iv) சரியல்ல

19. இராவண காவியம் :
    (i) தமிழ்த் தேசிய உணர்வுக் காப்பியம்
    (ii) தமிழக அரசின் விருதுபெற்ற காப்பியம்
    (iii) கீமாயணம் என்ற பெயர் கொண்டது
    (iv) புலவர் குழந்தை இயற்றியது
    இவற்றுள்,
    (1) (i), (ii), (iii) சரி
    (2) (i), (ii), (iii), (iv) சரி
    (3) (i), (ii), (iv) சரி
    (4) (i), (iii), (iv) சரி

20. நல்லாப் பிள்ளை பாரதம் :
    (i) விருத்தப் பாக்களால் பாடப்பெற்றது
    (ii) பாடப்பட்ட காலம் கிபி 18 ஆம் நூற்றாண்டு
    (iii) இருபது பருவங்கள் கொண்டது
    (iv) 15300 பாடல்கள் கொண்டது
    இவற்றுள்,
    (1) (i), (ii), (iii), (iv) சரி
    (2) (ii), (iii), (iv) சரி
    (3) (i), (ii), (iv) சரி
    (4) (i), (iii), (iv) சரி



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

21. தி. ஜானகிராமன் எழுதிய புதினங்கள் :
   (i) மரப்பசு, நளபாகம்
   (ii) உயிர்த்தேன், செம்பருத்தி
   (iii) அம்மா வந்தாள், மோகமுள்
   (iv) காகித மலர்கள், கிளிஞ்சல் கோபுரம்

   இவற்றுள்,
   (1) (i), (ii), (iii) சரி
   (2) (i), (ii), (iii), (iv) சரி
   (3) (i), (iii), (iv) சரி
   (4) (ii), (iii), (iv) சரி

22. பெருங்காப்பியம் :
   (i) பொருள் தொடர்நிலைச் செய்யுளில் ஒரு வகை
   (ii) நாற்பொருள் பயப்பது
   (iii) சந்தியில் தொடர்வது
   (iv) உட்பிரிவுகள் பலவுடையது

   இவற்றுள்,
   (1) (i), (ii), (iii) சரி
   (2) (i), (ii), (iii), (iv) சரி
   (3) (i), (ii), (iv) சரி
   (4) (ii), (iii), (iv) சரி

23. வெண்பாப் பாட்டியல் :
   (i) வச்சணந்தி மாலை என்று அழைக்கப்படும்
   (ii) நேமிநாதம் படைத்தவரால் இயற்றப்பட்டது
   (iii) மூன்று பிரிவுகளை உடையது
   (iv) வெண்பாவின் இலக்கணம் கூறுவது

   இவற்றுள்,
   (1) (i), (ii), (iv) சரி
   (2) (ii), (iii), (iv) சரி
   (3) (i), (ii), (iii) சரி
   (4) (i), (iii), (iv) சரி



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

24. சமாதி :
    (i) மற்றொன்றின் மேல் ஏற்றி உரைக்கப்படுவது எனும் பொருள்கொண்டது
    (ii) உரிய பொருளன்றி ஒப்புடைப் பொருள்மேல் தரும் வினை புணர்ப்பது
    (iii) 'அகலிரு விசும்பில் பாயிருள் பருகி, பகல் கான்று எழுதரும், பல்கதிர்ப் பகுதி'- என்பது இதற்கு எடுத்துக்காட்டு
    (iv) 'விழித்த குவளைக் கழிப்பேறுவாக்கிய கள்ளுண்டு களித்த வண்டினம்'- என்பதும் இதற்கு எடுத்துக்காட்டு

    இவற்றுள்,
    (1) (i), (ii), (iii), (iv) சரி (2) (i), (iii), (iv) சரி
    (3) (i), (ii), (iv) சரி (4) (i), (ii), (iii) சரி

25. உவமையணி :
    (i) ஒரு பொருளை விளக்க அதனுடன் ஒப்புமை உடைய வேறு பொருளை உவமிப்பது
    (ii) எல்லா அணிகளுக்கும் தாயாகத் திகழ்வது
    (iii) வினை, பயன், மெய், உரு என்னும் நிலைக் களன்களை உடையது
    (iv) முகத்தாமரை என்பது இதற்கு எடுத்துக்காட்டு

    இவற்றுள்,
    (1) (i), (ii), (iii), (iv) சரி (2) (i), (ii), (iii) சரி
    (3) (i), (iii), (iv) சரி (4) (ii), (iii), (iv) சரி

26. உறுதிக்கூற்று (உ) : வடக்கு நோக்கி உண்ணா நோன்பிருந்து உயிர் துறப்பது பண்டு தமிழ் மன்னர்கள் கொண்டிருந்த வழக்கமாகும்.

    காரணம் (கா) : மானம் அழிந்தபின் உயிர் வாழ்தலில் அவர்களுக்கு விருப்பம் இல்லை.

    (1) (உ) சரி, (கா) சரியன்று (2) (உ) சரி, (கா) சரி
    (3) (உ) சரியன்று, (கா) சரி (4) (உ) சரியன்று, (கா) சரியன்று



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

27. உறுதிக்கூற்று (உ) : ஏறுதழுவல் பண்டைய மருதநில மக்களின் மாண்பு
காரணம் (கா) : ஏறுதழுவல் மருத உரிப்பொருளுக்கு உகந்த நிகழ்ச்சியாகும்.

(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரி, (கா) சரியன்று
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

28. உறுதிக்கூற்று (உ) : களப்பிரர் ஆட்சிக் காலம் இருண்ட காலம் என வரலாற்று ஆசிரியர்களால் குறிக்கப்படுகின்றது.
காரணம் (கா) : அக்காலத்தில்தான் அறநூல்கள் அறிவொளி பரப்பின.

(1) (உ) சரி, (கா) சரியன்று
(2) (உ) சரி, (கா) சரி
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

29. உறுதிக்கூற்று (உ) : தமிழ்ச் சிறுகதையின் திருமூலர் என மௌனி போற்றப்படுகின்றார்
காரணம் (கா) : சித்தர்களைப் போற்றும் மரபு தமிழர்களிடையே நெடுங்காலமாக இருந்துவந்தது

(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரியன்று, (கா) சரி
(3) (உ) சரி, (கா) சரியன்று
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

30. உறுதிக்கூற்று (உ) : குறிப்பு வெளிப்படுக்கும் சத்துவம் பிறிதின் மறைத்து உரையாடல் இலேச அணி ஆகும்.
காரணம் (கா) : புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும் பழிப்பது போலப் புகழ் புலப்படுத்தலும் அதன்பால் உள.

(1) (உ) சரியன்று, (கா) சரி
(2) (உ) சரி, (கா) சரியன்று
(3) (உ) சரி, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

31. உறுதிக்கூற்று (உ) : 'அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு'.

காரணம் (கா) : 'நாணொடு நல்லாண்மை பண்டுடையேன், இன்றுடையேன் காமுற்றார் ஏறுமடல்'.

(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரி, (கா) சரியன்று
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

32. உறுதிக்கூற்று (உ) : கிராம தேவதைகளின் கோயில்களில் உயிர்ப்பலியிடும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்துவருகிறது.

காரணம் (கா) : ஊன் உண்ணும் வழக்கம் உடையவர்கள் தமிழர்கள்.

(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரியன்று, (கா) சரியன்று
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரி, (கா) சரியன்று

33. உறுதிக்கூற்று (உ) : திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி குட்டித் திருவாசகம் எனப் போற்றப்படுகிறது.

காரணம் (கா) : திருவாசகத்தின் அமைப்பு முறையை அது பின்பற்றியுள்ளது.

(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரியன்று, (கா) சரி
(3) (உ) சரி, (கா) சரியன்று
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

34. உறுதிக்கூற்று (உ) : பட்டினப்பாலை என்பது சங்க இலக்கியங்களுள் ஒன்று.

காரணம் (கா) : காவிரிப்பூம்பட்டினத்து நிகழ்ச்சிகளைப் புறத்திணையில் அமைத்துப் பாடப்பட்டது அது.

(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரி, (கா) சரியன்று
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

35. உறுதிக்கூற்று (உ) : சங்கப் பாடல்களை வீரயுகப் பாடல்கள் என்பர்.
காரணம் (கா) : சங்கப் பாக்களில் அகப் பாக்களே மிகுதி.
(1) (உ) சரி, (கா) சரியன்று
(2) (உ) சரி, (கா) சரி
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

36. உறுதிக்கூற்று (உ) : அற நூல்களுள் நாலடியார் குறிப்பிடத் தக்கது.
காரணம் (கா) : நாலடியார் என்பவரால் அது பாடப்பட்டது.
(1) (உ) சரி, (கா) சரியன்று
(2) (உ) சரி, (கா) சரி
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

37. உறுதிக்கூற்று (உ) : பண்டைத் தமிழ் இலக்கியத்தில் காணப்படும் விமர்சன ரத்தின மாலைதான் திருவள்ளுவ மாலை எனக் குறிப்பிடப்படுகின்றது.
காரணம் (கா) : திருக்குறளின் நிறை குறைகளைப் பாடும் வெண்பாக்களின் தொகுப்பு அது.
(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரியன்று, (கா) சரி
(3) (உ) சரி, (கா) சரியன்று
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

38. உறுதிக்கூற்று (உ) : தமிழ் எழுத்துகளில் சில கிரந்த எழுத்துகளும் இடம்பெற்றுவிட்டன.
காரணம் (கா) : பிறமொழிச் சொற்களைத் தமிழில் ஒலி சிதையாது எழுதவேண்டிய நிலை இருந்துவருகிறது.
(1) (உ) சரியன்று, (கா) சரியன்று
(2) (உ) சரி, (கா) சரியன்று
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரி, (கா) சரி



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

39. உறுதிக்கூற்று (உ) : சூடாமணி என்னும் நிகண்டு மிகவும் புகழ்பெற்றது.
காரணம் (கா) : சூடாமணி எனும் புலவரால் அது இயற்றப்பட்டது.
(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரி, (கா) சரியன்று
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

40. உறுதிக்கூற்று (உ) : மின்னஞ்சல் முறை, சமூக வலைத் தளங்களில் கருத்துகளைப் புலப்படுத்தும் முறை போன்றவை இக்காலத்தில் பெரு வளர்ச்சி கண்டுள்ளன.
காரணம் (கா) : அச்சு ஊடகங்கள் பெரிதும் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.
(1) (உ) சரி, (கா) சரி
(2) (உ) சரி, (கா) சரியன்று
(3) (உ) சரியன்று, (கா) சரி
(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

41. நிரல்படுத்துக: ஐம்புலன் தொழில்.
(1) காணல், கேட்டல், உண்ணல், உயிர்த்தல், உற்றறிதல்
(2) காணல், உண்ணல், உயிர்த்தல், உற்றறிதல், கேட்டல்
(3) காணல், கேட்டல், உயிர்த்தல், உற்றறிதல், உண்ணல்
(4) காணல், கேட்டல், உண்ணல், உற்றறிதல், உயிர்த்தல்

42. நிரல்படுத்துக: இதழ்களின் காலவரிசை.
(1) மணிக்கொடி, முல்லை, சரஸ்வதி, பால பாரதி
(2) மணிக்கொடி, பால பாரதி, சரஸ்வதி, முல்லை
(3) மணிக்கொடி, பால பாரதி, முல்லை, சரஸ்வதி
(4) மணிக்கொடி, முல்லை, பால பாரதி, சரஸ்வதி

43. நிரல்படுத்துக: தலைவியின் நலத்தின் புனைவு.
(1) முறிமேனி, வெறி நாற்றம், முத்தமுறுவல், வேல் உண்கண்
(2) முறிமேனி, முத்தமுறுவல், வேல் உண்கண், வெறி நாற்றம்
(3) முறிமேனி, வேல் உண்கண், முத்தமுறுவல், வெறி நாற்றம்
(4) முறிமேனி, முத்தமுறுவல், வெறி நாற்றம், வேல் உண்கண்



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

44. நிரல்படுத்துக: தீவக அணியின் நிலைக் களன்கள்.
   (1) குணம், சாதி, பொருள், தொழில்
   (2) குணம், தொழில், சாதி, பொருள்
   (3) குணம், தொழில், பொருள், சாதி
   (4) குணம், சாதி, தொழில், பொருள்

45. நிரல்படுத்துக: வாய்மைக் குடியின் பண்புகள்.
   (1) நகை, இன்சொல், ஈகை, இகழாமை
   (2) நகை, இன்சொல், இகழாமை, ஈகை
   (3) நகை, ஈகை, இன்சொல், இகழாமை
   (4) நகை, இகழாமை, ஈகை, இன்சொல்

46. நிரல்படுத்துக: புறநானூறு கூறும் ஐம்பூதம்.
   (1) நிலன், விசும்பு, நீர், வளி, தீ
   (2) நிலன், தீ, நீர், விசும்பு, வளி
   (3) நிலன், விசும்பு, வளி, தீ, நீர்
   (4) நிலன், வளி, தீ, நீர், விசும்பு

47. நிரல்படுத்துக: இறை மாண்புகள்.
   (1) இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல்
   (2) இயற்றல், வகுத்தல், ஈட்டல், காத்தல்
   (3) இயற்றல், காத்தல், வகுத்தல், ஈட்டல்
   (4) இயற்றல், காத்தல், ஈட்டல், வகுத்தல்

48. நிரல்படுத்துக: உவமை வேறுபாடு.
   (1) மிகுதல், குறைதல், தாழ்தல், உயர்தல், பால் மாறுபடுதல்
   (2) மிகுதல், தாழ்தல், குறைதல், உயர்தல், பால் மாறுபடுதல்
   (3) மிகுதல், உயர்தல், குறைதல், தாழ்தல், பால் மாறுபடுதல்
   (4) மிகுதல், குறைதல், தாழ்தல், பால் மாறுபடுதல், உயர்தல்

49. நிரல்படுத்துக: விளக்கணி வகைகள்.
   (1) பொருள், குணம், காரியம், காரணம்
   (2) பொருள், காரியம், குணம், காரணம்
   (3) பொருள், குணம், காரணம், காரியம்
   (4) பொருள், காரணம், காரியம், குணம்



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

50. நிரல்படுத்துக: சூத்திரக் கிடக்கை.

(1) ஆற்றொழுக்கு, தவளைப் பாய்த்து, அரிமா நோக்கு, பருந்தின் வீழ்க்காடு

(2) ஆற்றொழுக்கு, அரிமா நோக்கு, தவளைப் பாய்த்து, பருந்தின் வீழ்க்காடு

(3) ஆற்றொழுக்கு, தவளைப் பாய்த்து, பருந்தின் வீழ்க்காடு, அரிமா நோக்கு

(4) ஆற்றொழுக்கு, அரிமா நோக்கு, பருந்தின் வீழ்க்காடு, தவளைப் பாய்த்து

51. நிரல்படுத்துக: மருட்பாவின் பொருண்மைகள்.

(1) உடனிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, கைக்கிளை, செவியறிவுறூஉ

(2) உடனிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, கைக்கிளை

(3) உடனிலை வாழ்த்து, கைக்கிளை, செவியறிவுறூஉ, வாயுறை வாழ்த்து

(4) உடனிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ

52. நிரல்படுத்துக: காரிகை கூறும் அகவற்பா வகை.

(1) நேரிசை ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா

(2) நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டிலஆசிரியப்பா

(3) நேரிசை ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா அடிமறி மண்டிலஆசிரியப்பா,

(4) நேரிசை ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

53. பொருத்துக.

(a) விற்பூட்டு (i) சொற்றோறும் அடிதோறும் பொருளேற்று நிற்பது

(b) விதலை யாப்பு (ii) பாட்டினகத்துச் சொல்லப்பட்ட பொருள் ஒரு வழி நிற்பது

(c) பாசி நீக்கு (iii) தலையும் கடையும் பொருள் கொள்வது

(d) ஒருசிறை நிலை (iv) தலையும் இடையும் கடையும் பொருள் கொள்வது

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (iv) | (i) | (ii) |
| (2) | (iii) | (ii) | (iv) | (i) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

54. பொருத்துக.

(a) பார்ப்பார்க்கும் உரித்தே (i) பரத்தையிற் பிரிவே

(b) எல்லார்க்கும் உரித்தே (ii) வேந்துவினை இயற்கை

(c) உயர்ந்தோருக்கு உரித்தே (iii) காதற் பரத்தை

(d) நிலத்திரிபின்றே (iv) ஓதலும் காவலும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iv) | (iii) | (i) |
| (2) | (ii) | (iii) | (iv) | (i) |
| (3) | (ii) | (i) | (iv) | (iii) |
| (4) | (ii) | (iii) | (i) | (iv) |

55. பொருத்துக.

(a) பன்றி (i) மருதம்

(b) சுறா (ii) பாலை

(c) செந்நாய் (iii) நெய்தல்

(d) நீர்நாய் (iv) குறிஞ்சி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (ii) | (iii) | (i) |
| (2) | (iv) | (i) | (iii) | (ii) |
| (3) | (iv) | (iii) | (i) | (ii) |
| (4) | (iv) | (iii) | (ii) | (i) |



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

56. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | கோவூர் கிழார் | (i) | நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தி இல் |
| (b) | ஆலத்தூர் கிழார் | (ii) | இகழுநர் இசையடு மாயப் புகழோடு விளங்கிப் பூக்க நின் வேலே |
| (c) | ஆவூர் மூலங்கிழார் | (iii) | அறவையாயின் நினதெனத் திறத்தல் மறவையின் போரொடு திறத்தல் |
| (d) | ஐயூர் மூலங் கிழார் | (iv) | உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும் கடவ தன்மையின் கையுறவு உடைத்து |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (ii) | (iv) | (i) |
| (2) | (iii) | (i) | (ii) | (iv) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iii) | (iv) | (i) | (ii) |

57. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | புல் | (i) | நாலறி உயிர் |
| (b) | கிளிஞ்சில் | (ii) | ஓரறி உயிர் |
| (c) | அட்டை | (iii) | ஈரறி உயிர் |
| (d) | தும்பை | (iv) | மூவறி உயிர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (ii) | (iii) | (iv) | (i) |
| (3) | (ii) | (i) | (iii) | (iv) |
| (4) | (ii) | (iii) | (i) | (iv) |

58. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | தாழிசை | (i) | வைப்பு |
| (b) | கூன் | (ii) | எருத்தம் |
| (c) | சுரிதகம் | (iii) | இடைநிலைப் பாட்டு |
| (d) | தரவு | (iv) | விட்டிசை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (iv) | (i) | (ii) |
| (2) | (iii) | (ii) | (iv) | (i) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iii) | (ii) | (i) | (iv) |



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

59. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | கடை முரண் | (i) | முதற்சீர் ஒழித்த ஏனைய முச்சீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது |
| (b) | கடைஇணை முரண் | (ii) | இரண்டு, நான்காம் சீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது |
| (c) | பின் முரண் | (iii) | இறுதி இறுசீரக்கண் மறுதலைப்படத் தொடுப்பது |
| (d) | கடைக்கூழை முரண் | (iv) | அடிதோறும் இறுதிச் சீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (i) | (ii) | (iii) |
| (2) | (iv) | (ii) | (iii) | (i) |
| (3) | (iv) | (iii) | (i) | (ii) |
| (4) | (iv) | (iii) | (ii) | (i) |

60. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மதுரைக் கலம்பகம் | (i) | இரட்டையர்கள் |
| (b) | கச்சிக் கலம்பகம் | (ii) | குமர குருபரர் |
| (c) | திருவரங்கக் கலம்பகம் | (iii) | பூண்டி அரங்கநாத முதலியார் |
| (d) | தில்லைக் கலம்பகம் | (iv) | பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (ii) | (iii) | (i) | (iv) |
| (3) | (ii) | (iii) | (iv) | (i) |
| (4) | (ii) | (i) | (iii) | (iv) |

61. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஒட்டக் கூத்தர் | (i) | பல்லவர் காலம் |
| (b) | நக்கீரர் | (ii) | சோழர் காலம் |
| (c) | நாவுக்கரசர் | (iii) | சேரர் காலம் |
| (d) | குலசேகராழ்வார் | (iv) | பாண்டியர் காலம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iv) | (i) | (iii) |
| (2) | (ii) | (iii) | (iv) | (i) |
| (3) | (ii) | (iii) | (i) | (iv) |
| (4) | (ii) | (i) | (iv) | (iii) |



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

62. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | இலக்கியச் சோலையிலே | (i) | கா. கோதண்டராமன் |
| (b) | இலக்கியமும் இலக்கியப்போக்குகளும் | (ii) | ந. சஞ்சீவி |
| (c) | இலக்கியமும் திறனாய்வும் | (iii) | சோ. ந. கந்தசாமி |
| (d) | இலக்கிய இயல் அ. ஆ. | (iv) | கோ. கேசவன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (ii) | (iv) | (i) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iii) | (iv) | (i) | (ii) |
| (4) | (iii) | (ii) | (i) | (iv) |

63. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | தமிழர் சால்பு | (i) | தெ. பொ. மீ. |
| (b) | பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் | (ii) | வையாபுரிப் பிள்ளை |
| (c) | தமிழர் பண்பாடு | (iii) | சு. வித்தியானந்தன் |
| (d) | தமிழும் பிறபண்பாடும் | (iv) | க. கைலாசபதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (i) | (iv) | (ii) |
| (2) | (iii) | (ii) | (i) | (iv) |
| (3) | (iii) | (ii) | (iv) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

64. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | புதுக்கவிதை ஒரு பார்வை | (i) | ந. சுப்புரெட்டியார் |
| (b) | புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் | (ii) | பாலா |
| (c) | புதுக்கவிதை நூறு கட்டுரைகள் | (iii) | வல்லிக்கண்ணன் |
| (d) | புதுக்கவிதை நோக்கும் போக்கும் | (iv) | தமிழவன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (ii) | (iii) | (iv) | (i) |
| (3) | (ii) | (i) | (iv) | (iii) |
| (4) | (ii) | (i) | (iii) | (iv) |



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

65. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு | (i) | சு. சண்முக சுந்தரம் |
| (b) | நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம் | (ii) | அரு. ராமநாதன் |
| (c) | நாட்டுப்புற இயல் ஓர் அறிமுகம் | (iii) | தே. லூர்து |
| (d) | நாட்டுப்புறவியல் ஆய்வு | (iv) | ஆறு. அழகப்பன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (i) | (iii) | (ii) |
| (2) | (iv) | (iii) | (ii) | (i) |
| (3) | (iv) | (iii) | (i) | (ii) |
| (4) | (iv) | (ii) | (iii) | (i) |

66. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | தமிழ்மொழி வரலாறு | (i) | கே. கே. பிள்ளை |
| (b) | தமிழ் இலக்கிய வரலாறு | (ii) | சோம. இளவரசு |
| (c) | இலக்கிய வரலாறு | (iii) | பரிதிமாற் கலைஞர் |
| (d) | தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் | (iv) | கா. சு. பிள்ளை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (iv) | (ii) | (i) |
| (2) | (iii) | (ii) | (iv) | (i) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iii) | (i) | (ii) | (iv) |

67. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | இலக்கியவட்டம் | (i) | நா. பார்த்தசாரதி |
| (b) | தென்றல் | (ii) | க. நா. சுப்பிரமணியம் |
| (c) | சுபமங்களா | (iii) | கண்ணதாசன் |
| (d) | தீபம் | (iv) | கோமல்சுவாமிநாதன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (ii) | (iv) | (iii) | (i) |
| (3) | (ii) | (iii) | (iv) | (i) |
| (4) | (ii) | (i) | (iii) | (iv) |



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

(68-75) பின்வரும் பகுதியைப் படித்து, அதனைத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை தருக.

வில்லிபுத்தூரார் பாரதம் தமிழிலே சுவையுடையவர்களுக்கு இனிமை தரும் காவியங்களில் ஒன்று. என் இளமையிலே அந்நூலைப் படித்தகாலத்தில் அதிலுள்ள சந்த அமைப்பைக் கண்டு வியந்தேன். அந்நூலின் நடையிலே ஒரு தனியான கம்பீரம் உள்ளது. இடத்துக்கேற்ற சந்தங்கள் அதில் மிக அழகாக அமைந்திருக்கின்றன. குதிரையின் கதியொலியும் தேரின் கடகடவோசையும் யானையின் முழக்கமும் அந்தச் சந்தங்களிலே ஒலிக்கும் வடமொழிச் சொற்களையும் தொடர்களையும் வில்லிபுத்தூரார் தடையின்றி மிகுதியாக எடுத்து ஆளுகின்றார்.

சபாபருவத்திலே சூதுபோர்ச் சருக்கத்தில் தரும புத்திரர் சகுனியுடன் சூதாடித் தோற்ற வரலாறு சொல்லப்படுகிறது. சூதாட்டம் முடிந்தபிறகு துரியோதனன் அரசவைக்குத் திரௌபதியை அழைத்து வரும்வண்ணம் தன தம்பி துச்சாதனனுக்குக் கட்டளையிடுகிறான்.

தன்னுடைய தாயாகிய காந்தாரி, 'நீ போய் வா' என்று கூற, துச்சாதனன் அன்னை போன்ற திரௌபதியின் முன் சென்று தன் கையிலுள்ள செண்டால் அவளது கூந்தலைப் பற்றிச் செல்லலானான். கொடிபோன்ற திரௌபதி அந்தோ! தன் குழல் குலைய மானங் குலைய மனங்குலையத் தான் செல்லுமிடத்தே தன் கணவர் இருப்பர் என்ற தைரியத்தோடு சென்றாள்.

திரௌபதி அக்காலத்தில் தீண்டாத நிலையில் இருந்தாளென்று தெரிகின்றது. பின்னேஓரிடத்தில், "தீண்டாத கற்புடைய செழுந்திருவை"என்று அந்நூலாசிரியரே குறிப்பிடுகின்றார். அதனால் தான் துச்சாதனன் அவளைக் கையாற் பற்றாமல் செண்டாற் பற்றிச் சென்றானென்று ஆசிரியர் கூறினார். இவ்விஷயங்களை யான் பலரிடத்தில் என் இளமையிலே கேட்டிருக்கிறேன்.

'கைச் செண்டால் அவள்பைங் குழல்பற்றி'என்ற இடத்தில் குறிக்கப்பெற்ற செண்டு என்பதற்குப் பூச்செண்டு என்றே பொருள் செய்து வந்தனர்.'துச்சாதனன் கையில் பூச்செண்டு ஏது?திரௌபதி கூந்தலில் அணிந்திருந்த மாலையைப் பிடித்து இழுத்தான் என்று சொல்லலாமா? பாட்டில் தெளிவாகக் கைச்செண்டாலென்று சொல்லப் பட்டிருக்கிறதே. தீண்டாத நிலையில் உள்ள அவள் கூந்தலில் மாலை அணிவதும் கையில் செண்டு வைத்திருப்பதும் இயல்பல்லவே? செண்டென்பதற்குப் பந்தென்று ஒருபொருள்



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

உண்டு. அதை அமைத்துப் பார்க்கலாமா? பந்துக்கு இங்கே என்ன சம்பந்தம்?' என்று இவ்வாறெல்லாம் எனக்கு அடிக்கடி ஐயங்கள் தோன்றிக்கொண்டே இருந்தன.

சற்றேறக்குறைய நாற்பது வருஷங்களுக்கு முன், வழக்கமாக நான் செய்துவரும் தமிழ் யாத்திரையில் ஒரு முறை பொறையாறு முதலிய இடங்களுக்குப் போக நேர்ந்தது. என்னோடு இருந்து தமிழ்ப்பணிக்கு உதவிபுரிந்து வந்த திருமானூர்க் கிருஷ்ணையரென்பவருடன் அம்முறை புறப்பட்டேன். மாயூரத்தைக் கடந்து ஆறுமைல் தூரத்திலுள்ள ஆறுபாதி என்னும் ஊருக்கருகில் சென்று கொண்டிருந்தோம். அங்கே வழியில் கீழ்மேல் அக்கிரகாரத்துக்குப் பின்பக்கமாக வடபுறமுள்ள குளத்தின் கீழ்கரையில் ஒரு பெருமாள் கோயில் இருந்தது. அக்கோயிலின் வாசலில் அதனுடைய தர்ம கர்த்தாவும் வேறு சிலரும் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் இருந்த நிலையப் பார்த்தபோது யாரோ பெரிய உத்தியோகஸ்தர் ஒருவருடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு நிற்பதாகத் தோற்றியது. எங்களைக் கண்டவுடன் தர்மகர்த்தா என்னை அவ்வுத்தியோகஸ்தராக எண்ணிக்கொண்டா ரென்று ஊகித்தேன். அந்தக் கலத்தில் உத்தியோகஸ்தராக இருந்தாலும் கோவிலுக்குப் போகும் போது வைதிகக் கோலத்தோடுதான் போவது வழக்கம். ஆதலின் நான் மிகவும் சாதாரண உடை யணிந்து செல்வதைக் கண்டும் அவர் என்னையே உத்தியோகஸ்தராக எண்ணிவிட்டார், "வாருங்கள், வாருங்கள்" என்று உபசரித்து வரவேற்றார்.

தரிசனம் செய்தபோது பெருமாள் திருநாமம் ராஜகோபாலப் பெருமாளென்று அறிந்தேன். அவர் திருக்கரத்தில் பிரம்பைப்போல ஒன்று காணப்பட்டது. அதன் தலைப்பில் இரண்டு வளைவுகள் இருந்தன. நான் அதுகாறும் பெருமாள் திருக்கரத்தில் அத்தகைய ஒன்றைக் கண்டதில்லை; ஆதலால் தர்மகர்த்தாவை நோக்கி, "இது புதிதா யிருக்கிறதே; என்ன?" என்று கேட்டேன். "அது தான் செண்டு" என்று அவர் கூறினார்."செண்டா!" என்று சொல்லி அப்படியே நின்றுவிட்டேன்."எங்கே, அதை நன்றாகக் காட்டச் சொல்லுங்கள்" என்று வேண்டினேன்.

கோயில் அர்ச்சகர் கற்பூர தீபத்தால் அந்தச் செண்டை நான் நன்றாகப் பார்க்கும்படி காட்டினார். நான் அதைக் கவனித்துப் பார்த்தேன். என் மனக்கண்முன் அப்போது திரௌபதியின் உருவம் வந்து நின்றது; துச்சாதனன் தலைப்பு வளைந்த பிரம்புபோன்ற ஒரு கருவியால் அவள் கூந்தலைப் பற்றி யிழுக்கும் காட்சி வந்தது. அடுத்தபடியாக உக்கிர குமாரர் மேருமலையை அந்தக்



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

கருவியால் எறிந்து திரித்த தோற்றம் தோற்றியது. அவர் மறைந்தார். கரிகாலன் கையில் செண்டாயுதத் தோடு நின்றான். ஐயனாரும் நின்றார். அவர்கள் கைகளில் எல்லாம் தலைப்பு வளைந்த பிரம்புபோன்ற கருவியைக் கண்டேன். சில நிமிஷங்கள் வரையில் இந்த அகக் காட்சிகளால் புறவுலகத்தை மறந்திருந்தேன்.அந்த அர்ச்சகர் காட்டிய கற்பூர தீபம் பெருமாள் திருக்கரத்திலிருந்த ஆயுதத்தை எனக்குத் தெளிவாகக் காட்டியது. அதனோடு நெடுங்காலமாக என் மனத்திலிருந்த சந்தேக இருளை அகற்றித் துச்சாதனன், உக்கிரகுமார், கரிகாலன், ஐயனாரென்பவர்கள் கையில் உள்ள கருவி இன்னது தானென்று அறியும்படியும் செய்தது.

" ஐயா, நீங்கள் எனக்குப் பெரிய உபகாரம் செய்தீர்கள். பெருமாளின் தரிசனத்தால் எனக்கு ஒரு பெரிய லாபம் கிடைத்தது; என் மனம் சந்தோஷம் அடைந்தது. இதுவரையிலும் இந்தச் செண்டைப் பார்த்ததில்லை. உங்கள் தயையால் இதைப் பார்த்தேன்" என்று தர்மகர்த்தாவை நோக்கிக் கூறினேன்.

" இந்தப் பெருமாளும் மன்னார்குடியில் எழுந்தருளியிருக்கும் பெருமாளும் ஒரே அச்சு. அங்கும் பெருமாளின் திருக்கையில் செண்டு உண்டு. செண்டலங்காரப் பெருமாள் என்றும் அவரது திருநாமம் வழங்கும்" என்று அவர் கூறினார்.

68. செண்டு என்பது ஒரு கருவி என்பதை முதன்முதல் அறிந்தது :
   (1) கரிகாலன் கையில் செண்டு இருந்ததைப் பார்த்தபோது
   (2) துச்சாதனன் கையில் செண்டு இருந்ததைப் பார்த்தபோது
   (3) ராஜகோபாலப்பெருமாள் கையில் செண்டு இருந்ததைப் பார்த்தபோது
   (4) ஐயனார் கையில் செண்டு இருந்ததைப் பார்த்தபோது

69. சந்தத்தில்இருப்பது :
   (i) குதிரையின் கதி ஒலி
   (ii) தேரின் கடகட ஒலி
   (iii) யானையின் முழக்கம்
   (iv) வடமொழிச் சொல்
   இவற்றுள்,
   (1) (i), (iii), (iv) சரி
   (2) (i), (ii), (iv) சரி
   (3) (ii), (iii), (iv) சரி
   (4) (i), (ii), (iii), (iv) சரி



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

70. பெருமாள் கையில் செண்டைக் கண்டபோது உ.வே.சா.வுக்குத் தோன்றிய காட்சிகள் :

(i) திரௌபதி உருவம்

(ii) துச்சாதனன் செண்டால் திரௌபதியைப் பற்றியது

(iii) உக்கிரகுமாரர் மேரு மலையைச் செண்டால் எறிந்தது

(iv) கோயில் தர்மகர்த்தா உருவம்

இவற்றுள்,

(1) (i), (ii), (iii), (iv) சரி

(2) (i), (ii), (iii) சரி

(3) (i), (iii), (iv) சரி

(4) (ii), (iii), (iv) சரி

71. உறுதிக்கூற்று (உ) : துச்சாதனன் செண்டால் திரௌபதியைப் பற்றிச் சென்றான்.

காரணம் (கா) : திரௌபதி தீண்டாத நிலையில் இருந்தாள்.

(1) (உ) சரியன்று, (கா) சரி

(2) (உ) சரி, (கா) சரியன்று

(3) (உ) சரி, (கா) சரி

(4) (உ) சரியன்று, (கா) சரியன்று

72. உறுதிக்கூற்று (உ) : ஆறுபாதிப் பெருமாள் கோயில் வாசலில் தர்மகர்த்தாவும் வேறு சிலரும் நின்றிருந்தனர்.

காரணம் (கா) : உ.வே.சா.வை வரவேற்பதற்காக நின்றிருந்தனர்.

(1) (உ) சரி, (கா) சரி

(2) (உ) சரி, (கா) சரியன்று

(3) (உ) சரியன்று, (கா) சரி

(4) (உ) சரியன்று, (கா) சரியன்று



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

73. நிரல்படுத்துக.

(1) தீபம் காட்டுதல், திரௌபதி உருவம் தோன்றல், மேரு மலை தெரிதல், புற உலகு மறைதல்

(2) தீபம் காட்டுதல், மேரு மலை தெரிதல், புற உலகு மறைதல், திரௌபதி உருவம் தோன்றல்

(3) தீபம் காட்டுதல், திரௌபதி உருவம் தோன்றல், புற உலகு மறைதல் மேரு மலை தெரிதல்

(4) தீபம் காட்டுதல், புறஉலகு மறைதல், திரௌபதி உருவம் தோன்றல் மேரு மலை தெரிதல்

74. நிரல்படுத்துக.

(1) சூதுபோர்ச் சருக்கம், சகுனி, சூதாட்டம், தரும புத்திரர்

(2) சூதுபோர்ச் சருக்கம், தரும புத்திரர், சூதாட்டம், சகுனி

(3) சூதுபோர்ச் சருக்கம், சூதாட்டம், தரும புத்திரர், சகுனி

(4) சூதுபோர்ச் சருக்கம், தரும புத்திரர், சகுனி, சூதாட்டம்

75. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மன்னார்குடி | (i) | கிருஷ்ணையர் |
| (b) | ஆறுபாதி | (ii) | தர்மகர்த்தா |
| (c) | அக்கிரகாரம் | (iii) | ராஜகோபாலப் பெருமாள் |
| (d) | திருமானூர் | (iv) | செண்டலங்காரப் பெருமாள் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (ii) | (i) |
| (2) | (iv) | (ii) | (iii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (iv) | (ii) | (i) | (iii) |

- o O o -



www.a2zSubjects.com

www.a2zSubjects.com

**Space For Rough Work**



www.a2zSubjects.com